சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 03.03.2023

ம.சா.1– செல்வராஜ் த/பெ –கஜேந்திரன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிர்மனுதாரர் எனது தாய் மாமா மகள் என்றால் என் அம்மாவின் பெரியம்மா பேத்தி. திருமணத்தின் போது ரூ.1,00,000/– மதிப்புள்ள பண்ட பாத்திரங்கள் மற்றும் 10 பவுன் நகைகள் எதிர்மனுதாரர் பெற்றோர் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் பயனாக 12 வயதில் அக்னிராஜ் என்ற ஆண் குழந்தை உள்ளது. அவன் தற்போது விருதுநகர் RC பள்ளியில் 6 ம் வகுப்பு படித்து வருகிறான் என்றால் சரிதான். திருமணம் முடிந்து 13 ஆண்டுகள் நானும் எதிர்மனுதாரரும் சந்தோசமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சண்டை சச்சரவு இருந்து தான் வந்தது. நான் 10 வருடங்களாக இருசக்கர வாகன வொர்ஷா ப் நடத்தி வந்தேன் தற்போது வேறொரு வொர்ஷா ப்பில் வேலை பார்த்து வருகிறேன். நான் நடத்திவந்த வொர்ஷா ப் நஷ்டம் ஏற்பட்டதால் அந்த நஷ்டத்தை எதிர்மனுதாரர் குடும்பத்தினர் சரிசெய்வார்கள் என்று எதிர்பார்த்தேன் என்றும் அவர்கள் எந்த உதவியும் செய்யாததால் எதிர்மனுதாரர் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி இரண்டாவது முறை கர்ப்பமானபோது முதல் மாதத்திலே அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். என்மனைவி ஐந்து மாத கர்ப்பமாக இருந்தபோது என் அத்தை சுப்பு நேரம் சரியில்லை என்று சொல்லி

எதிர்மனுதாரரின் தாலியை கழற்றி வாங்கி வைத்துகொண்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவி இரண்டாவது முறை கர்ப்பமான போது அதனை கலைக்க சொல்லி கருக்கலைப்பு மாத்திரை வாங்கிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. கடந்த ஒரு வருடமாக எனது மனைவி மற்றும் குழந்தைகளை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த ஒரு வருட காலத்தில் என் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு தேவையான எந்த உதவியையும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி மற்றும் குழந்தைகளின் சான்றிதழ்கள், பண்டபாத்திரங்கள் அனைத்தும் என் வீட்டில் தான் உள்ளது என்றால் பண்டபாத்திரங்கள் மற்றும் மகனின் பிறப்பு சான்றிதழ் மட்டுமே என்னிடம் உள்ளது. மற்றவைகளை எதிர்மனுதாரர் எடுத்து சென்றுவிட்டார். கடந்த 22.04.2022ம் தேதி எதிர்மனுதாரர் என் மீது வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளதாக விருதுநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் அது பொய் புகார். மேற்படி புகாரில் எங்களை சேர்ந்து வாழச்சொல்லி அறிவுறுத்தினார்கள். ஆனால் நான் சேர்ந்து வாழாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மூன்று நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் அவரது தம்பியுடன் வந்து சண்டை போட்டதால் சேர்ந்து வாழவில்லை. 2011ம் வருடம் விருதுநகர் பாண்டியநகர் தங்கமணி காலனியில் என் பேரிலும் எனது தம்பி பெயரிலும் 4 குழி காலிமனை வாங்கினேன் என்றால் சரிதான். எனது மனைவியின் 5 பவுன் நகைகளை அடமானம் வைத்துதான் அதை வாங்கினேன் என்றால் என் மனைவியின்

நகையையும் எனது அம்மாவின் நகையையும் அடமானம் வைத்து தான் வாங்கினேன். எதிர்மனுதாரர் அவர் பெயரில் அந்த இடத்தை ஏன் வாங்கவில்லை என்று கேட்டு பிரச்சனை நடந்ததா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மகனின் எதிர்கால நலனை கருத்தில்கொண்டு என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் சேர்ந்து வாழ விரும்பவில்லை. நான் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல.